# Australian Government Disaster Recovery Payment

Australian Government Disaster Recovery Payment (AGDRP) என்பது பேரிடர் என்று அறிவிக்கப்பட்ட நிகழ்வு ஒன்றினால் கணிசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் கொடுப்பனவு ஆகும். சிறு சேதாரம் அல்லது அசௌகரியத்திற்காக அல்ல இது.

## உங்களால் எவ்வளவு தொகையினைப் பெற இயலும்

நீங்கள் தகுதி பெறுவீர்களேயானால்:
- வயது வந்த ஒவ்வொருவருக்கும் $1,000
- 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் $400.

## இதை யாரால் பெற இயலும்

AGDRP -யைப் பெற நீங்கள் கட்டாயமாக:
- AGDRP-க்கான வசிப்பிட விதிமுறைகளைப் பூர்த்தி செய்தாகவேண்டும்
- பேரிடர் நிகழ்ந்த பொழுது 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்கவேண்டும், அல்லது 16 வயதிற்குக் கீழ்ப்பட்டவராகவும் தகுதிபெறும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுவரவும் வேண்டும்
- நிகழ்வு ஏற்பட்ட பகுதி என அறிவிக்கப்படுவதற்கான தகுதித் தேவைகள் இருந்தாகவேண்டும்.

அறிவிக்கப்பட்ட பேரிடர் ஒன்றினல் நீங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கவேண்டும். உதாரணத்திற்கு:
- உங்களுக்குப் பாரதூரமான காயம் ஏற்பட்டது
- இறந்துபோன, அல்லது காணமல் போயிருக்கும் ஆஸ்திரேலியப் பிரசை அல்லது ஆஸ்திரேலிய வதிவாளர் ஒருவருடைய சொந்தக் குடும்ப அங்கத்தவராவீர்கள் நீங்கள்
- நீங்கள் பிரதானமாக வசிக்கும் வீட்டினை இந்தப் பேரிடர் அழித்துவிட்டது, அல்லது உங்களுடைய வீடு இடிக்கப்படும் நிலையில் இருக்கிறது
- நீங்கள் பிரதானமாக வசிக்கும் வீட்டின் உட்புறத்திற்கு பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது
- நீங்கள் பிரதானமாக வசிக்கும் வீட்டின் உட்புறம் வானம் பார்க்கும் அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது
- கட்டுமான-ரீதியாக வலுவற்றது என்று நீங்கள் பிரதானமாக வசிக்கும் வீடு அறிவிக்கப்பட்டுள்ளது
- உங்களுடைய வீட்டின் உட்புறம் சாக்கடைக் கழிவுநீரால் கெட்டுப்போயிருக்கிறது
- நீங்கள் பிரதானமாக வசிக்கும் வீட்டிலிருந்த உங்களுக்குச் சொந்தமான முக்கிய சொத்து அல்லது சொத்துக்களை இந்தப் பேரிடர் அழித்திருக்கிறது அல்லது சேதப்படுத்தியிருக்கிறது
- மேலே சொல்லப்பட்டுள்ளவற்றில் ஏதாவது ஒன்றிற்கு ஆளான தகுதிபெறும் பிள்ளை ஒன்றைப் பராமரித்துவருபவராக நீங்கள் இருக்கவேண்டும்.

## அர்த்த-விளக்கங்கள்

- சாதாரணமாக வசிப்பதற்கான உரிமை அல்லது அனுமதி உங்களுக்கு உள்ள பிரதானமான இடம் உங்களுடைய ‘பிரதானமான வீடு’ ஆகும். விடுமுறைக் கால வீடுகள், முதலீட்டு சொத்துகள், குடும்பத்தினர் அல்லது நண்பர்களுடனான தற்காலிகத் தங்கல்கள், தடுப்புக்காவல் மையங்கள் அல்லது சிறைச்சாலை.
- $20,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஒட்டுமொத்த சந்தை மதிப்புடைய சொத்து அல்லது சொத்துகள் ஒரு பிரதான சொத்தாகும். உதாரணத்திற்கு, கட்டடங்கள், வாகனங்கள், காரவான்கள், தண்ணீர்த் தொட்டிகள் அல்லது கன ரக இயந்திரங்கள் ஆகியன இதில் உள்ளடங்கும்.
- அறிவிக்கப்பட்ட பேரிடரினால் நீங்கள் பாதிக்கப்பட்ட முதல் நாளன்று தகுதி பெறும் பிள்ளை ஒன்றின் பராமரிப்பாளராக நீங்கள் இருந்திருக்கவேண்டும், மற்றும் கீழ் வருவனவற்றில் ஒன்று பொருந்தவேண்டும்:
    - அந்தப் பிள்ளையின் பிரதானப் பராமரிப்பாளர் எனும் வகையில் Parenting Payment, JobSeeker Payment, Youth Allowance for job seekers அல்லத Special Benefit ஆகிய கொடுப்பனவுகளை நீங்கள் பெற்றுவருகிறீர்கள்
    - அந்தப் பிள்ளைக்கான Family Tax Benefit -ஐ நீங்கள் பெற்றுவருகிறீர்கள், அந்தப் பிள்ளை 15 வயது அல்லது அதற்குக் குறைவான வயதுடையது, அத்துடன் அந்தப் பிள்ளைக்கான பராமரிப்பில் 66% உங்களுடையது
    - 15 வயது அல்லது அதற்குக் குறைவான வயதுடைய பிள்ளையின் அன்றாடப் பராமரிப்பு, பொதுநலம் மற்றும் வளர்ச்சிக்கான சட்டப்படியான பொறுப்பினை நீங்கள் கொண்டுளீர்கள்.

பின் வரும் விடயங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளடங்க, ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/disastersupport** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்:

- வசிப்பிடம் குறித்த விதிமுறைகள்
- 16 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான தகுந்த கொடுப்பனவுகள்
- நிகழ்வு ஏற்பட்டதாக அறிக்கப்பட்டுள்ள பகுதிகள்.

## கோரிக்கையை விடுப்பது எவ்வாறு

இணைய-வழியில் கோரலைச் சமர்ப்பிப்பது மிகத் துரிதமான வழியாகும். myGov கணக்கு ஒன்று உங்களிடம் இல்லாவிட்டால், அந்தக் கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அதை Centrelink-உடன் நீங்கள் இணைக்க வேண்டியிருக்கும். **servicesaustralia.gov.au/mygovguides** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

கோரலை விடுப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், **180 22 66** எனும் இலக்கத்தினை நீங்கள் அழைக்கலாம். காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரைக்குமான உள்ளூர் நேரத்திற்கு இந்தத் தொலைபேசி இணைப்பு திறப்பில் இருக்கும். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமென நீங்கள் கேட்கலாம், நாங்கள் ஒருவரை இலவசமாக ஏற்பாடு செய்வோம்.

ஒரு சோடியினரில் நீங்கள் ஒருவரானால், நீங்கள் இருவரும் இந்தக் கொடுப்பனவிற்கான கோரிக்கையை விடுக்கலாம். நீங்களும் உங்களுடைய வாழ்க்கைத்துணைவரும் தனித் தனிக் கோரல்களை விடுக்கவேண்டும்.

## மேலதிகத் தகவல்களுக்கு

- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/disastersupport** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்கள் மொழியிலுள்ள தகவல்களை வாசிக்க, செவி மடுத்துக் கேட்க அல்லது காண **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- கொடுப்பனவுகள் Centrelink மற்றும் சேவைகளைப் பற்றி உங்கள் மொழியில் எம்முடன் பேச **131 202**-ஐ அழையுங்கள்
- சேவை மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள்.

குறிப்பு: ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும் செய்யப்படும் ‘**13**’ இலக்க அழைப்புகளுக்கு நிலையானதொரு வீதத்தில் கட்டணம் அறவிடப்படும். அந்த வீதமானது உள்ளூர் அழைப்பு ஒன்றிற்கான கட்டணத்திலிருந்து வேறுபடலாம், அத்துடன் தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கு இடையேயும் மாறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ‘**1800**’ இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசிகள் மற்றும் அலைபேசிகளில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு ஆகும் நேரம் கணக்கிடப்பட்டு இன்னும் உயர்ந்த வீதத்திலான கட்டணம் அறவிடப்படலாம்.

## பொறுப்புத்துறப்பு

இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்களானவை கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கானதொரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவு ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா என்பதும் உங்களுடைய குறிப்பிட்ட சூழல்களுக்கு ஏற்ற விண்ணப்பம் ஒன்றை விடுப்பதும் உங்களுடைய பொறுப்பு.

# Australian Government Disaster Recovery Payment

The Australian Government Disaster Recovery Payment (AGDRP) is a one-off payment to help you if you are significantly affected by a declared disaster.It is not for minor damage or inconvenience.

## How much you can get

If you are eligible you will get:
- $1,000 per adult
- $400 for each child younger than 16.

## Who can get it

To get AGDRP you must:
- meet AGDRP residence rules
- be 16 years or older at the time of the disaster or under 16 and getting an eligible payment
- meet declared area eligibility requirements.

You must have been adversely affected by a declared disaster. For example:
- you were seriously injured
- you are the immediate family member of an Australian citizen or resident who died or is missing
- the disaster destroyed your principal place of residence or it must be demolished
- there has been major damage to the interior of your principal place of residence
- the disaster has exposed the interior of your principal place of residence to the elements
- your principal place of residence has been declared structurally unsound
- sewage has contaminated the interior of your residence
- the disaster has destroyed or damaged a major asset or assets you own at your principal place of residence
- you are the carer of an eligible child who has experienced any of the above.

## Definitions

- Your principal place of residence is the main place where you have a right or licence to normally live. It does not include holiday homes, investment properties, temporary stays with family or friends, detention facilities or prison.
- A major asset is an asset or assets with a combined market value of $20,000 or more. For example, this includes buildings, vehicles, caravans, water tanks or large scale machinery.
- You were the carer of an eligible child on the first day you were affected by the declared disaster, and one of these points apply:
    - you get Parenting Payment, JobSeeker Payment, Youth Allowance for job seekers or Special Benefit as a principal carer of that child
    - you get Family Tax Benefit for that child, the child is 15 or younger and you have at least 66% care of the child
    - you have legal responsibility for the day-to-day care, welfare and development of the child who is 15 or younger.

Go to **servicesaustralia.gov.au/disastersupport** for more information in English, including:

- residence rules
- eligible payments for people under 16
- declared areas.

## How to claim

The fastest way to claim is online. You will need to set up a myGov account and link to Centrelink if you do not have one yet. Go to **servicesaustralia.gov.au/mygovguides**

If you need help with claiming, you can call **180 22 66**. The phone line is open Monday to Friday from 8 am to 5 pm local time.You can ask for an interpreter and we will arrange one for free.

If you are a member of a couple, you can both claim this payment. You and your partner must make separate claims.

## For more information

- go to **servicesaustralia.gov.au/disastersupport** for more information in English
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language
- call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- visit a service centre.

Note: calls from your home phone to ‘**13**’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘**1800**’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

### Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It is your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.